பக்கங்கள்: 12 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 18 திங்கட்கிழமை 02.08.2021 கதிர் 270

### இனிது ரகசியம் அல்ல!

கல்வித் துறையோடு நொட்டிய அரசாங்கம் இப்போது குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்த நிலையை எதிர்கொண்டிருக்கின்றது.

எல்லா வலிமையான மரங்களையும் கொத்தித் துவம்சம் செய்யும் மரக்கொத்தி பக்கம்02

# ஆசிரியர்கள் வர வேண்டும்; மாணவர்கள் வர வேண்டாம்

## கல்வி அமைச்சு இப்படி அறிவுறுத்தல்



நாடளாவிய ரீதியில் இன்று முதல் அரச சேவையை வழமை போன்று முன்னெடுப்பது தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கேற்ப செயற்படுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே. கபில சீ.கே.பெரேரா அறிவித்துள்ளார். 2

## சம்பள முரண்பாட்டை தீர்க்குமாறு கோரி ஆசிரியர்கள் நேற்று பெரும் போராட்டம்

கல்வி சமூகத்தினர் எதிர்நோக்கும் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நுவரெலியா மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து 2

## எகிறும் தொற்றாளர் தொகை நேற்று 2,490 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 490 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் 2

## அதிபர்கள், ஆசிரியர்களை இன்று போகவேண்டாம் என்கிறது சங்கம்

பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையைச் சுட்டக்காட்டிய மத்திய கல்வி அமைச்சின் செயலாளருடைய தெளிவில்லாத சுற்றறிக்கையாலும், முன்னுக்குப்பின் முரணான வெளியீடுகளாலும் அதிபர்களும், ஆசிரியர்களும் ஏன் கல்வி உயர் அதிகாரிகளும் குழம்பிப்போய் உள்ளனர்.

வேறுவிதமான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இவ்வாறான குழப்பமான சுற்றறிக்கைகளை 2

## மேலும் 67 பேர் உயிரிழப்பு 4,500ஐத் தாண்டியது காவு

இலங்கையில் கொரோனாத் தொற்றால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 500 ஐக் கடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் 67 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 31 பெண்களும், 36 ஆண்களும் அடங்குகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு 2

## பளை விபத்தில் ஒருவர் காயம்!

கிளிநொச்சி, பளை – முல்லையடிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் 2







### இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடைசியில் வாழையில் வந்து கொத்தி, கொண்டு சிக்கிக் கஷ்டப்படுமாம் என் பார்கள்.

அப்படித்தான் தனது நாடாளுமன்ற வலிமை, நிறைவேற்றதிகாரப் பலம், இவை யனைத்தையும் தாண்டி இராணுவக் கட்டமைப்புப் பாணி நிர்வாகம், படைப்பல வலிமை எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு இரும்புப் பிடி அரசாங்கம் ஒன்றை நடத்தலாம் என்று கனவு கண்டார் கோட்டாபய.

அவர் எதிர்பார்ப்பு – நம்பிக்கை – எல்லாம் வெறும் பகல் கனவாய்ப் போய்விடும் போல தெரிகின்றது.

சிறுக சிறுக ஆரம்பித்த ஆசிரியர்கள் போராட்டம் இப்போது மாவட்டங்கள் தோறும், நகரங்கள் எங்கும் பெரும் எழுச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது.

ஆசிரியத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துச் சமாளிக்கும் 'மஹிந்த தந்திரம்', அவரது தேர்தல் கால 'மஹிந்த சிந்தனை' தந்திரம் போல தோற்றுப் போய்விட்டமை கண்கூடு.

பிரதமருக்கும், ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுப் பெரும் தோல்வியில் முடிவடைந்த நிலையில் ஆசிரியர் போராட்டங்கள் தெற்கில் பிரதேசங்கள் தோறும் தீவிரமடைந்து வருகின்றன.

போதாக்குறைக்கு கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலத்தை இந்தச் சமயத்தில் கொண்டு வந்து சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி போல நோண்டியிருக்கின்றது அரசு. இந்தச் சட்டத்தின் மூலம் உயர்கல்வியை அரசு இராணுவமயப் படுத்துவதோடு, அந்த இராணுவம் மூலமே உயர்கல்வியைத் தனியார்மயப்படுத்தி, வர்த்தகமயப்படுத்துவதாகவும் கல்வியுலகம் சீறுகின்றது.

பிராந்தியங்கள் தோறும், கொவிட் கட்டுப்பாட்டுக்கு மத்தியிலும் ஆசிரியர்கள், அதிபர்கள் தொழிற்சங்க ரீதியில் திரண்டு வருகின்றமையால் விடயம் கோட்டாபய அரசுக்குக் கையாள முடியாத விவகாரமாக மாறி வருகின்றது என்கின்றார் தென்னிலங்கை ஊடக நண்பர்.

உடனடி நெருக்கடியை சமாளிப்பதற்கு அரசு இரண்டு முடிவுகளைச் செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஒன்று – கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் வரும் வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கையில் அதை கால வரையறையின்றி தற்காலிகமாகத் தள்ளிப்போடுவது குறித்து அரசு சிந்திக்கின்றது.

அடுத்தது – கொவிட் தொற்றுக் காரணமாக பாடசாலைகளை இன்னும் ஆரம்பிக்க முடியவில்லையாயினும், ஏனைய அரச ஊழியர்களைப் போல ஆசிரியர்களையும் இன்று முதல் கடமைக்குச் சமுகமளிக்கச் செய்து பாடசாலைகளில் கட்டிப்போட்டால், அந்தச் சமயத்தில் ஒன்று கூடிப் போராட்டங்களில் ஈடுபட்டுத் தலையிடி தரும் அவர்களின் நடவடிக்கையைத் தடுக்கலாம் என அரசு கருதுகின்றது. அதனால்தான் நடக்காத பாடசாலையை நடத்துவதற்கு தினசரி பாடசாலைக்கு ஆசிரியர்களும், ஏனைய அரச ஊழியர்கள் போல சமுகம் தரவேண்டும் என்ற கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இயங்காத பாடசாலைக்கு ஆசிரியர்கள் சமுகம் தந்து ஒப்பமிட்டு வெறும் வகுப்பறைகளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற அரசின் நடவடிக்கை ஆசிரியர்களை இன்னும் சினத்தில் ஆழ்த்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

– மின்னல் –

### மேலும் 67 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 508 ஆக எகிறியுள்ளது.

### அதிபர்கள், ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடவேண்டாம் எனக் கேட்டுக்கொள்வதோடு, அதிபர், ஆசிரியர்களை அவசியமில்லாமல் பாடசாலைக்கு அழைக்கவேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

இதைவிட பாடசாலைகளில் பிள்ளைகள் இல்லாத நிலையில் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை அழைப்பது பொருத்தமற்றது.

ஆகையால் கல்வி அமைச்சிடம் இருந்து தெளிவான அறிவித்தல்கள் (மாணவர் வருகையின் பின்னர்) வரும் வரை பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டாம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### ஆசிரியர்கள் வர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண, வலய மற்றும் பிராந்திய கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கே கல்வி அமைச்சின் செயலாளர் இவ்வாறு அறிவித்தல் விடுத்துள்ளார்.

அதிபர்களையும், ஆசிரியர்களையும் பாடசாலைக்கு இன்று முதல் சமுகமளிக்குமாறு அறிவுறுத்தல் விடுத்துள்ள கல்வி அமைச்சு, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் வினவிய போது, பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் செயற்பாடு இப்போது ஆரம்பிக்கப்படாது என்றும், ஆனால் அதிபர்கள், ஆசிரியர்கள் இன்று முதல் பாடசாலைக்கு வர வேண்டும் என்றும் பதிலளித்தார்.

### எகிறும் தொற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 11 ஆயிரத்து 349 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,792 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 2 இலட்சத்து 78,910 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில், 27 ஆயிரத்து 143 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### சம்பள முரண்பாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நுவரெலியாவில் நேற்று மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா காமினி தேசிய கல்லூரிக்கு முன்பாக ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள், அங்கிருந்து வாகன பேரணியாக நுவரெலியா – பதுளை பிரதான வீதி ஊடாக நுவரெலியா நகரை நோக்கி வருகை தந்தனர்.

இதன்போது கல்விச் சமூகத்தினர் எதிர்நோக்கும் கோரிக்கைகள் தொடர்பாக எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தி அவர்கள் கோம் எழுப்பினர்.

இந்தப் பேரணியில் நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா, வலப்பனை, கொத்மலை, ஹங்குராங்கெத்த மற்றும் அம்பகமுவ ஆகிய கல்வி வலயங்களை சேர்ந்த சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றுபட்டு கலந்துகொண்டனர்.

### பளை விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த கனரக வாகனம் மோதியே விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனோவால் யாழில் நேற்று இருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த திருநெல்வேலி, பலாலி வீதியைச் சேர்ந்த 64 வயதுடைய ஆண் ஒருவரும், சண்டிலிப்பாய், மாசியப்பிட்டியைச் சேர்ந்த 67 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 129ஆக உயர்வடைந்துள்ளது.

# கரவெட்டியில் நேற்று 18 பேருக்குத் தொற்று

யாழ்., வடமராட்சி, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று 18 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குறித்த முடிவு வெளியாகியுள்ளது.

கரவெட்டி சுகாதா ர வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 66 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவர்களில் 45 பேருக்குத் தொற்று இல்லை எனவும், 18 பேருக்குத் தொற்று எனவும், 3 பேருக்கு மீள பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.குடாநாட்டில் 50 பேர் உட்பட வடக்கில் 69 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 02

வடக்கு மாகாணத்தில் 69 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் நேற்று 351 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி யாழ். மாவட்டத்தில் 50 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 03 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 05 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 04 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் (இராணுவத்தினர்) 06 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# ரிஷாத்தின் மைத்துனரால் மற்றுமொரு பணிப்பெண் பாலியல் துஷ்பிரயோகம்

## பொலிஸாரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகம் செய்தி

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணியாற்றிய 29 வயதான மற்றுமொரு பணிப்பெண்ணையும், ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது என சிங்கள ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரிஷாத்தின் இல்லத்தில் பணியாளாக இருந்து தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த சிறுமி ஹிஷாலினி தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குழுவிடம், குறித்த 29 வயதான பெண் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதன் அடிப்படையில் இந்த விடயம் தெரியவந்திருக்கின்றது எனச் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தமது செய்தி சேவைக்குத் தெரிவித்தார் என்று குறித்த சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதையடுத்து பொலிஸ் குழு ஒன்று நேற்று ரிஷாத்தின் இல்லத்துக்கு மீண்டும் சென்று வாக்குமூலம் பதிவு செய்திருக்கின்றது.

ஏற்கனவே ரிஷாத்தின் வீட்டில் பணிப்பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகள் நிறைவேற்றப்படுவதே இலங்கைக்கு நன்மை

## இந்திய வெளிவிவகார அமைச்சர் முரளிதரன் சுட்டிக்காட்டு



தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகள் நிறைவேற்றப்படுவதே இலங்கைக்கு நன்மையாக அமையும் என்று இந்தியா நம்புகின்றது.

– இவ்வாறு இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்திய ராஜ்யசபாவில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவம் என்பன தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது.

தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின் ஊடாக, தமிழ் மக்களது உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவது, இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு பங்களிப்பு செய்யும் – என்றார்.

# 400 ஏக்கர் அரச காணி தனிநபரால் அபகரிப்பு சம்பவ இடத்திற்கு விரைந்தார் திலீபன் எம்.பி.



பனிக்கர் புளியங்குளம் கிராமத்தில் சுமார் 400 ஏக்கர் அரச காணியை தனிநபர் ஒருவர் அனுமதியின்றி சுவீகரித்துள்ள நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனால் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

வவுனியா பரண்நட்டகல் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பனிக்கர் புளியங்குளம் கிராமத்தில் சுமார் 400 ஏக்கர் அரச காணியை தனிநபர் ஒருவர் அனுமதியின்றி சுவீகரித்து அந்தக் காணியைத் துப்புரவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரதேச செயலாளர் மூலம் கிராம சேவையாளர் குறித்த காணி அரச காணி என்றும், இதில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாமென்றும், அந்தக் காணியில் துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டும் அது குறித்த நபரால் கிழித்தெறியப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டும் பொலிஸார் தடுப்பதற்கு எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இத்தகவலையறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் -

பிரதேச செயலாளரைத் தொடர்புகொண்டு கிராம சேவையாளர் மூலம் மேற்படி நபரின் மேல் பொலிஸில் முறைப்பாடு செய்யும் படியும், அடாத்தாக காணி பிடித்தவரை தொடர்பு கொண்டு உங்களிடம் ஆவணம் இருந்தால் பிரதேச செயலாளரிடம் காண்பித்து உங்களுக்குரிய காணியை பெற்றுக் கொள்ளுமாறும், அடாத்தாக போடப்பட்ட கொட்டிலை அகற்றுவதோடு, வேலி போடுவதற்கு எடுக்கும் முயற்சியை நிறுத்துமாறும், இந்தக் காணிக்குள் எவ்வித வேலைத்திட்டமும் செய்ய வேண்டாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஓமந்தை பொலிஸாரிடம், அடிக்கடி இப்பகுதியை பார்வையிடுமாறும், குறித்த நபரால் மரங்கள் வெட்டப்பட்டோ அல்லது வேறு வேலைத் திட்டங்கள் நடந்தாலோ பொலிஸாரே பொறுப்புக்கூற வேண்டிவரும் எனவும் தெரிவித்திருந்தார்.

மேற்படி காணியின் ஒருபகுதிக்குள் இக்கிராமங்களைச் சேர்ந்த காணியற்ற குடும்பங்களையும், உபகுடும்பங்களையும் குடியேற்ற உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பௌதீகவள கட்டடத் தொகுதி அமைப்பு





யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் யாழ். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நோயாளர்களின் நலன் கருதி உடற்பயிற்சி சிகிச்சைக்கான பௌதீகவள கட்டடத் தொகுதி வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வொன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு யாழ்.பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் விடுதியில் வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வே.கமலநாதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.கேதீஸ்வரன் மற்றும் தியாகி அறக்கொடை நிலையத்தின் தலைவர் வாமதேவா தியாகேந்திரன் ஆகியோர்கள் கலந்துகொண்டு பௌதீகவள கட்டடத்தொகுதியைக் கையளித்துள்ளனர்.

இதற்காக 83 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடத்தொகுதி விடுதியாகக் காணப்படுகின்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.மோகனகுமார் மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், சிகிச்சை நிபுணர்கள், தாதியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் நிதியுதவியை வழங்கிய நன்கொடையாளர் வாமதேவா தியாகேந்திரனுக்கான கௌரவிப்பும் இதன் போது இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் கட்டளைக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வட மாகாண உதவிப் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் யாழ்.மாவட்டத்தில் பல வர்த்தக நிலையங்களில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, கோப்பாய், அச்சுவேலி, நீர்வேலி ஆகிய பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த சனிக்கிழமை இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்குப் பால் மா தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டதுடன், விற்பனைக்கு மறுத்தமை மற்றும் சட்டவிரோதமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் எரிவாயு விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களும் பரிசோதனை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## University of Jaffna

## INVITATION FOR BIDS

## Provision of Cleaning, Janitorial and Maintenance Services - 2021 / 2022

1. The Chairman, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up to 2.00 p.m. on 31st August, 2021 from the eligible Firms.

| Contract No (1) | Service (2) | One similar contract (Rs. in Mn) (3) | Annual average volume (Rs. in Mn) (4) | Trained staff available (5) | Bid Security Rs. (6) |
|---|---|---|---|---|---|
| UOJ/AD/CS/2021/2022/Jaffna | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for University of Jaffna – 2021/2022 **(Jaffna Premises)** | 10.0 | 25.0 | 75 | 410,000.00 |
| UOJ/AD/CS/2021/2022/Kilinochchi | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for University of Jaffna – 2021/2022 **(Kilinochchi Premises)** | 5.0 | 11.5 | 25 | 250,000.00 |

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.

3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids-(Documentary evidences should be provided with Bids):

3.1 Firms must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.

3.2 Firms must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than the value indicated in column 3 above against each contract.

3.3 Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years of such firms should be at least the value indicated in column 4 above against each contract.

3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last

3. years of such firms should be at least the value indicated in column 5 above against each contract.

4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Administration Branch, University of Jaffna and inspect the bidding documents at the same address on any working day during working hours.
Contact numbers: Tel: 021 2226517 Fax: 021 222 6517

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Administration Branch, University of Jaffna, **until 23rd August, 2021** from 9:00 hrs to 15:00 hrs upon payment of a **non-refundable fee of Rupees three thousand five hundred (Rs.3,500/-) for each bid. All bids shall be accompanied by a bid security for the amount as indicated in column 6 for each contract** in Bank Guarantee valid for 120 days (should be as 30.12.2021) from scheduled bid opening date obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.

6. Bidders are strongly advised to attend the **pre-bid meeting on 16th August, 2021 at 10.00 hrs** in the board room of the University of Jaffna for **contracts No** UOJ/AD/CS/2021/2022/Jaffna and **pre-bid meeting on 18th August, 2021 at 10.00 hrs** in the Maintenance Branch, Ariviyalnagar, Kilinochchi for **contract No** UOJ/AD/CS/2021/2022/Kilinochchi and visit each location before pricing.

7. Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, Administration Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on 31st August, 2021 or** be deposited in the tender box kept in the Registrar's office on or before the above date and time. Bids will be opened soon after closing the bids in the presence of the bidders' representatives who choose to attend.

8. Bids shall be valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

Chairman,
Procurement Committee,
University of Jaffna, Thirunelvely, Jaffna.
02.08.2021

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆறு வாரங்களில் வரும் ஆப்பு

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 48ஆவது கூட்டத் தொடருக்கு இன்னும் ஆறு வாரங்களே இருக்கின்றன.

கடந்த மார்ச்சில் 46ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிரான மோசமான தீர்மானம் ஒன்று மேற்கு நாடுகளின் தீவிர முன்னெடுப்பில் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர் விளைவுகளை – நெருக்குவாரங்களை – இந்த செப்டெம்பர் கூட்டத் தொடரில் இலங்கை சந்திக்கப் போகின்றது என இப்போதே எதிர்வுகள் கூறப்படுகின்றன.

ஆனால் எதிர்கொள்ளப் போகும் பின்னடைவுகள், பாதிப்புகள் குறித்து இலங்கை அரசு – குறிப்பாக அதன் வெளிவிவகார அமைச்சு – அலட்டிக் கொள்ளாமல் விட்டேத்தியாக இருப்பதாக கொழும்பில் நடுநிலை அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அது மாத்திரமல்ல, ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும், நியூயோர்க்கில் ஐ.நா. தலைமையகத்திலும் இலங்கை தொடர்பாகக் கட்டவிழும் விடயங்கள் சம்பந்தமாக இரண்டு இடங்களிலும் உள்ள இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதிகளின் அலுவலகங்கள் நித்திரை தூங்குவது மட்டுமல்லாமல், பகல் கனவும் காண்கின்றன என்று அவர்கள் விமர்சிக்கின்றனர்.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான சாட்சியங்களைப் பதிவு செய்து, ஆவணப்படுத்தி, சேகரித்துப் பேணுவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு விசேட அதிகாரம் அளித்த இலங்கை தொடர்பான கடந்த மார்ச் அமர்வின் ஜெனீவாத் தீர்மானம், அந்த விடயங்களுக்காகத் தனியான அலுவலகம் ஒன்றைத் திறந்து பணியாற்றவும் அங்கீகரித்தது.

இலங்கைச் சம்பவங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்துவதற்கு இத்தகைய சான்றுகள், சாட்சியங்கள், ஆவணங்களைச் சேகரித்துப் பேணுவது அவசியம் என்ற காரணத்தை முன்வைத்து இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த விடயங்களைக் கையாள்வதற்கு சர்வதேச குற்றவியல் விசாரணைகள், சர்வதேச குற்றவியல் நீதி தொடர்பான புலன் விசாரணைகள், வழக்குத் தொடுத்தல் ஆகிய துறைகளில் அதிக அனுபவம் மிக்க சிரேஷ்ட சட்ட ஆலோசகர் ஒருவர் தலைமையில் 13 அதிகாரிகள் நியமிக்கப்படவிருக்கின்றனர். தவிரவும், மேலும் ஒரு சிரேஷ்ட சட்ட ஆலோசகரும், இரண்டு மேலதிக சட்ட ஆலோசகர்களும் அதில் இடம்பெறவுள்ளனர்.

இவர்களைத் தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஏற்கனவே ஆரம்பித்து விட்டார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக முதல் கட்டமாக 28 லட்சம் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் தெரிவித்திருந்தது. ஐ.நா. தலைமையகத்திடம் இது தொடர்பான கோரிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்விடயத்தை ஒட்டி கடந்த ஜூன் முற்பகுதியில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா ஒரு பகிரங்கப் பேட்டி அளித்திருந்தார். அதில் அவர் தெரிவித்த கருத்துக்களை அவதானித்த நோக்கர்கள்,ஜெனிவாவிலும், நியூயோர்க்கிலும் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதிகளின் அலுவலகங்கள் தூங்குவது மட்டுமல்ல நல்ல பகல் கனவும் காண்கின்றன என்று ஏளனம் செய்கின்றனர்.

*"ஐ.நா. மிகுந்த நிதி நெருக்கடியில் உள்ளது. அதன் வரவு – செலவுத் திட்டத்தில் பெரும் பற்றாக்குறை – வெட்டு – விழுந்துள்ளது. ஐ.நா. தனது பட்ஜெட்டை ஐம்பது வீதத்தினால் குறைக்க வேண்டியுள்ளது. அதனால் இலங்கையில் பொறுப்புக் கூறல் தொடர்பான ஐ.நா. அலுவலகம் ஒன்றை ஆரம்பிப்பது சாத்தியமற்றது. அது மாயமாகிவிட்டது."* – என்ற கருத்துப்பட தினேஷ் குணவர்த்தனா அப்போது கதை அளந்திருந்தார்.

ஆனால், நியூயோர்க்கில் ஐ.நா. தலைமையகம் தனது வருடாந்த வரவு – செலவுத் திட்டத்தில் மேற்படி இலங்கை தொடர்பான சாட்சியங்கள், ஆவணங்கள், சான்றுகளை சேகரித்துப் பேணுவதற்கான அலுவலகத்தைத் திறப்பதற்குரிய நிதியை ஒதுக்கியுள்ளது. இதன்படி இவ்வாண்டுக்கான நிதியில், 7 லட்சத்து 37 ஆயிரம் அமெரிக்க டொலரும் அடுத்த ஆண்டுக்கான நிதியில் எஞ்சிய 21 லட்சம் அமெரிக்க டொலரும் முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆக, கடந்த மார்ச் மாத ஜெனிவா அமர்வின் தீர்மானப்படி இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்ற விசாரணைகள் கட்டவிழத் தொடங்கப் போகின்றன. அதைத் தீவிரமாக முன்னெடுப்பதற்கு வழி செய்யும் – கடுமையான வாசகங்களுடன் கூடிய – புதிய பிரேரணை ஒன்றை வரும் செப்டெம்பரில் நிறைவேற்றுவதற்கு மேற்கு தேசங்களை உள்ளடக்கிய இணை நாடுகள் பிரிட்டன் தலைமையில் கறுவிக் கொண்டு தயாராகி வருகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# வவுனியாவில் மேய்ச்சல் தரைகள் உருவாக்கம்!

## நடவடிக்கை எடுப்பதாக திலீபன் எம்.பி. உறுதி



வவுனியா மாவட்டத்தில் மேய்ச்சல் தரைகளை உருவாக்கவும், நகர்ப்புறங்களில் மாற்று வழிகளைக் கையாளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வவுனியா மாவட்ட பால் பண்ணையாளர்களுடன், சங்கத் தலைவர் எஸ்.கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

வவுனியா மாவட்ட பாற் பண்ணையாளர்களுக்கு நிறையப் பிரச்சினைகள் உள்ளன. மேய்ச்சல் தரை இல்லாதமையால் அவர்கள் கஷ்ரப்படுகிறார்கள். ஜனாதிபதி மேய்ச்சல் தரை தொடர்பில் பேசியிருந்தார்.

காடுகளை அண்டிய பகுதிகளில் மேய்ச்சல் தரைகளை உருவாக்க முடியும். இருந்தாலும் நகர்ப்புறங்களில் இருக்கும் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு இது ஒரு பிரச்சினையாக இருக்கிறது.

இதற்கான ஒரு மாற்று வழியை கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் பேசி மேற்கொள்ளலாம் என நினைக்கிறேன். அதைவிட, தற்போது 85 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்படுகின்ற பாலின் விலை முதலாம் திகதிக்குப் பின் 90 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்படும் எனக் கால்நடை வளர்ப்பாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் மூலம் முடிவு எட்டப்பட்டது.

வவுனியா கால்நடை வைத்திய நிலையம் பெரும் குறைபாடாக உள்ளது. இன்று அல்ல பல தடவை பல கோரிக்கைகளை முன்வைத்தும் அவை நிறைவேற்றப்படவில்லை. உரிய முறையில் வைத்திய அதிகாரியோ அல்லது மாற்று அதிகாரியோ அங்கு இல்லை.

அவசர தேவை என்றால் கூட அதைச் சென்று பார்க்க நீண்ட நாள்களாகின்றன. இதனால் மாடுகள் இறக்கும் நிலை கூட ஏற்படுகிறது. இது தொடர்பில் விளக்கம் கோரி உரிய அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பத் திட்டமிட்டுள்ளேன்.

மாடுகளைப் பிடித்து எழுத்தமானமாக தண்டப்பணம் பெற்று வருகிறார்கள். இதற்கு விரைவில் தீர்வு காண வேண்டும். இது தொடர்பில் விரைவில் கமநல அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளேன்.

அதன் பின் இதற்குத் தீர்வு எட்டப்படும் என நம்புகின்றேன். வவுனியாவில் களவாக மாடுகள் வெட்டப்படுகின்றன. இது தொடர்பில் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபருடன் பேசவுள்ளேன். இவ்வாறான சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

அவ்வாறான சம்பவங்கள் ஏற்பட்டால் உடன் தெரியப்படுத்துமாறும் கால்நடை வளர்ப்போரிடம் கோரியுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலின் போது கால்நடை வளர்ப்போர் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்திருந்தமையுடன், பாற்பண்ணையாளர்கள் பலரும் கலந்து கொண்டு தமது கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

# ஒரே நாளில் இரு கைகளிலும் கொவிட் தடுப்பூசி போட்டார்கள்

## யாழில் வயோதிபப்பெண் குற்றச்சாட்டு

யாழ். பரியோவான் கல்லூரியில் அமைக்கப்பட்ட தடுப்பூசி மையத்தில் தனக்கு இரண்டு கைகளிலும் ஒரே நாளில் தடுப்பூசி போடப்பட்டதாக தடுப்பூசியை பெற்ற வயோதிபப் பெண்ணொருவர் தெரிவித்துள்ளார்.

அவரது வீட்டில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே குறித்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

குறித்த மேற்படி நிலையத்தில் தடுப்பூசியைப் பெறுவ தற்காகச் சென்றிருந்தேன். எனக்கு ஒரு கையில் தடுப்பூசி ஏற்றப்பட்ட நிலையில் எனக்கு தடுப்பூசியை வழங்கிய பெண் யாரோ ஒருவருடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார்.

அவரிடம் நான் இரண்டு தடவைகளுக்கு மேல் எழுந்து செல்லலாமா எனக் கேட்டேன் அவர் பதிலளிக்காமல் யாரோ ஒருவருடன் தொலைபேசியில் உரையாடியபடி சென்றார்.

நான் அவ்விடத்திலேயே இருக்க மறு பக்கத்தில் இன்னொரு உத்தியோகத்தர் அம்மா கையை காட்டுங்கள் என்று கூறியபடி இன்னுமொரு தடுப்பூசியைப் போட்டார்.

ஊசி போட்ட சிறு நேரத்தில் எனக்கு தலை சுற்றுவது போல் உணர்வுஏற்பட்டது. அங்கிருந்த வைத்தியர்களிடம் சொன்னேன் நீங்கள் சற்று அமர்ந்திருந்து விட்டுச் செல்லுங்கள் எனப் பதில் கூறினார்கள்.

எனது மகளுடன் வீடு செல்லும்போது எனக்கு இரண்டு கைகளிலும் ஊசி போடப்பட்டது எனக் கூறினேன்.

எனது மகள் அவ்வாறு ஊசி போடக் கூடாது எனக்கூற நடந்த சம்பவத்தை எனது மகனிடம் தெரிவித்தேன்.

தடுப்பூசி ஒன்றா இரண்டா ஏற்றுவது என்ற விடயம் எனக்குத் தெரியாது. மகனை அழைத்துக் கொண்டு தடுப்பூசி வழங்கப்பட்ட விதம் தொடர்பில் அறிவதற்காகச் சென்றேன்.

முதலில் உள்ளே விட மறுத்து விட்டார்கள். பின் வைத்தியரைச் சந்திக்க அனுமதித்தார்கள் நடந்த சம்பவத்தை வைத்தியரிடம் எனது மகன் விவரமாகச் சொன்னார்.

எங்கள் முன்னிலையில் அங்கு கடமையிலிருந்த வைத்தியர் கையடக்கத் தொலைபேசி களைக் கடமையின் போது பாவிக்காதீர்கள் என அறிவுரை வழங்கினார்.

எனக்கு ஏதேனும் வித்தியாசமான உணர்வுகள் ஏற்பட்டால் தம்மைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுரை கூறியமையுடன் மறுநாள் எனது வீடு தேடி வைத்தியர் ஒருவர் வந்து எனது உடல் நலம் குறித்துப் பார்வையிட்டு சென்றார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுமி ஒருவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

வவுனியா - கனகராயன்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலங்குளம் பகுதியில் கிணற்றில் இருந்து 7 வயது சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமியின் பெற்றோர் வீட்டில் இல்லாத சமயம் அவரது அயல் வீட்டுக்கு சிறுமி சென்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் நீண்ட நேரமாகியும் சிறுமியைக் காணாத நிலையில் அயல் வீட்டார் தேடியுள்ளனர். இதன்போது அருகிலுள்ள கிணற்றில் சிறுமி விழுந்துள்ளமை கண்டறியப்பட்ட நிலையில், சிறுமி உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளார் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் ஆலங்குளம் பகுதியை சேர்ந்த நிசாந்தி என்ற 7 வயது சிறுமியே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 32

கேணல் ஹரிஹரனுடன் ஹோட்டல் சோழாவில் இடம்பெற்ற இரவு விருந்துடன் கூடிய அந்த மூன்று மணி நேர உரையாடல் - சந்திப்பு - இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலம் முழுவதும் முரண்பாடுகள், மோதல்கள், கருத்துவேறுபாடுகள் போன்றவற்றுக்கு மத்தியிலும் சுமுகமாக உதயன் பத்திரிகையைக் கொண்டு நடத்துவதற்கான ஓர் இடைவெளியைப் பெற்றுத் தந்தது எனலாம்.

நான் உதயன் நிலைமையை அவருக்கு விளங்கப்படுத்தினேன். ஏற்கனவே 'முரசொலி', 'ஈழமுரசு' ஆகிய பத்திரிகைகளுக்குக் குண்டு வைத்துத் தகர்த்தனர் என்ற கெட்ட பெயர் இந்தியப் படைக்கு உண்டு. புலிகளுக்கும் உதயனுக்கும் இடையில் எந்தப் பெரிய முரண்பாடும் இல்லை. இந்தப் பின்புலத்தில் உதயனுக்கு நெருக்கடி ஏற்பட்டாலும், நாங்களாகவே பிரசுரத்தை நிறுத்தினாலும் கெட்ட பெயர் இந்தியப் படைக்குத் தான் என்று தெளிவு படுத்தினேன். உதயன் தடைப்படாது வெளிவருவதை உறுதிப்படுத்துவது உங்கள் பொறுப்பு என்றேன் நான்.

அது புரிந்தபடியால்தான் இப்படி உங்களை அழைத்து உரிய மரியாதை, மதிப்புக் கொடுத்துப் பேசுகிறேன் என்ற சாரப்பட அவர் பதில் இருந்தது.

அவர் உண்மையான பிராமணர். பூணூல் தரித்து, தினசரி சந்தியாவந்தனம் செய்கின்ற பிராமணர். அவர் இராணுவத்தில் இருப்பதே பொருத்தமற்றது என்று எனக்கும் தோன்றியது.

இப்போதும் கூட இலங்கை விவகாரங்களை ஒட்டிய அவரின் இராணுவ விமர்சனக் கட்டுரைகளை இலங்கையில் தமிழ்த் தேசியப் பத்திரிகைகளில் காணமுடியும்.

கொழும்பில் வித்தியாதிபதியாக இருந்தவர் லக்ஷ்மண ஐயர். அவருடைய துணைவியார் பாலம் லக்ஷ்மண ஐயர். நேரடியாகத் தமிழகத் தொடர்புடையவர். வேலூர் பக்கம். அவருடைய சகோதரி தான் கேணல் ஹரிஹரனின் தாயார்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் இருந்து காலைகதிர் இதழில் தாராளமா


லக்ஷ்மண ஐயர்

கக் கட்டுரைகள் வரைந்து தள்ளும் மகாதேவஐயர் ஜெயராஜசர்மா, முன்னாள் வித்தியாதிபதி லக்ஷ்மண ஐயரின் இன்னொரு சகோதரரின் மகன். ஜெயராஜ சர்மா இங்கு வடக்கில் கல்விப் பணியாற்றிய சமயத்தில் கரம்பொனில் உள்ள அவரது வீட்டுக்கு கேணல் ஹரிகரன் இராணுவ சீருடையில் வந்து, தங்கி, உடை மாற்றி குளித்து வேட்டி கட்டி, சந்தியாவந்தனம் செய்து, பூஜையை முடித்து போவார். யாழ்ப்பாணத்திலும் கேணல் ஹரிஹரனுக்கு ஏராளமான தொடர்புகள் இருந்தன.

அந்தக் காலத்தில் வெளியான உதயன் தொடர்பிலும் அவருக்கு ஒரு நல்ல பார்வை இருந்தது. வடக்கிலிருந்து வெளியாகும் - வெளியாகிய - அனைத்துப் பத்திரிகைகளும் புலிப் புராணம் படுபவை என்பது அவர் கணிப்பு. ஆயினும் உள்ளவற்றுக்குள் உதயன் வள்ளிசு


பாலம் லக்ஷ்மண ஐயர்

என்பது அவரது முடிவாக இருந்தது. உதயனின் இருதலைக் கொள்ளி எறும்பு நிலைமை குறித்துத் தாம் மேலிடத்துக்கு தெரிவிப்பார் என்றும், புலிகளின் குரலாக இயங்காமல், தமிழ் மக்களின் குரலாக உதயன் இயங்கும் வரை தொல்லை இருக்காது என்றும் அவர் உறுதி தந்தார்.

அவரது சந்திப்புக்குப் பின்னர் கீழ் மட்ட இராணுவ அதிகாரிகளால் அவ்வப்போது தொல்லைகள், நெருக்கடிகள், அழுத்தங்கள் ஏற்பட்டபோதும் மேல் மட்டத்தில் ஓரளவு நிலைமையைச் சமாளிக்கக் கூடியதாக இருந்தது.

இந்தியப் படைகளின் யாழ் நகர தளபதிகளாக பிரிகேடியர் காலோன், பிரிகேடியர் அதிகாரி என்றெல்லாம் பலர் வந்தனர். அமைதிப்படையின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் கேணல் ஹரிகரனின் கவனிப்புக்குரிய பத்திரிகை என்ற நாமம் ஒரு காவலை - பாதுகாப்பை - தந்தது.

எனினும் பின்னர் மாகாண நிர்வாகத்தை கைப்பற்றிய ஈ.பி.ஆர்.எல்.எவ். - ஈ.என்.டி.எல்.எவ். கூட்டின் தொல்லையும் நெருக்கடிகளும் இந்திய அமைதிப் படையின் அதிகாரத்தையும் விஞ்சி நடந்தன. அவை பற்றியெல்லாம் எழுதுவதானால் இத்தொடரை வருடக்கணக்கில் நீடிக்க வேண்டியிருக்கும். அதோடு அவை இத்தொடருக்கு - சிவநாயகம் ஐயா நினைவுப் பகிர்வுக்கு தொடர்பற்றவை. அதனால் அவற்றை விட்டு விடுகிறேன். எனினும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவற்றை எழுதுவேன். நிச்சயமாக வாசகர்கள் ஆவலுடன் தொடர்ந்து வாசிக்கக் கூடிய அம்சங்கள், திகிலூட்டும் விடயங்கள், மனதை நெருடும் உண்மைகள் அதில் இருக்கும்.

மொத்தத்தில் இந்தியப் படைகளின் காலத்தில் 'உதயன்' நெருப்பாற்றை நீந்திக் கடந்தது. அதன் பிரதான சுக்கானை நான் பிடித்திருந்து வழிப்படுத்தினேன்.

சிவநாயகம் ஐயா போன்ற பெருந்தலைகள் பிச்சையாக இட்ட அந்த படிப்பினைகள், பாடங்கள், வழங்கிய நெறிப்படுத்தல்களே அந்த துணிச்சலையும், மனதைரியத்தையும், நேரிய பாதைக்கான வழிப்படுத்தலையும் தந்து நின்றன என்பேன்.

கேணல் ஹரிஹரன் சென்னையில் இருந்த எனக்கும் யாழ்ப்பாணத்தில் உதயன் அலுவலகத்திற்கு இடையில் தொடர்பாடலுக்கு ஒரு வழி செய்து தந்தார்.


*"சித்தப்பா வீட்டில் உங்கள் செய்தி என்வலப்பை காலை 8 மணிக்கு முன்னர் ஒப்படையுங்கள். காலையிலிருந்து ஒரு 'சொப்பர்' (ஹெலிக்கொப்டர்) தாம்பரம் வரும். அதில் உங்கள் உதயன் பத்திரிகைகளின் சில பிரதிகள் இங்கு வரும். முக்கியமாக எனது பார்வைக்காக. அவை உடன் என் வீட்டுக்கு வந்து சேரும். அதில் ஒரு பிரதியை நான் காலையில் தாம்பரம் அலுவலகத்துக்குப் போகும் முன்னர் வழியில் சித்தப்பாவிடம் ஒப்படைப்பேன். அச்சமயங்களில் உங்கள் செய்தி என்வலப் அங்கு இருக்குமானால் அதனைப் பெற்றுச் செல்வேன். தாம்பரம் 'சொப்பர்' பலாலி திரும்பும்போது அதில் உங்கள் செய்தி என்வலப்பை கொடுத்து விடுவேன். பலாலியில் உள்ள எனது பிரிவு தினசரி நண்பகலுக்கு முன்னர் அந்த அதனை யாழில் உங்கள் அலுவலகத்தில் தவறாது ஒப்படைக்கும்."* - என்றார் கேணல் ஹரிஹரன்.

எனக்காகவே செய்யப்பட்ட ஏற்பாடு போலிருந்தத. அது. பெரும்பாலும் எந்தக் குறைபாடுமின்றி நான் சென்னையில் இருந்த சில மாதங்களும் இந்தத் திட்டம் வேலை செய்தது.

இந்த ஏற்பாட்டால் எனது உதயன் அலுவலகமே ஆச்சரியப்பட்டுப் போனது.

நேரத்துடன் காலையில் எழுந்து சென்னையிலிருந்து வெளியாகும் அனைத்துத் தமிழ்ப் பத்திரிகைகளையும் வாங்கி வருவேன். இலங்கைத் தமிழருக்கு ஈடுபாடுள்ள செய்திகளைத் தேடித்தேடி வெட்டிக் கத்திரிப்பேன். முதல் நாள் இரவு வரை நான் எழுதிய செய்திகள், கட்டுரைகள் என்பவற்றையும் பெரிய என்வலப்பில் போட்டு ஒட்டி, ஒரு பொடி நடையில் இரண்டு தெரு தள்ளியிருக்கும் லக்ஷ்மண ஐயா வீட்டில் ஒப்படைப்பேன்.

ஜூனியர் விகடன் அலுவலகத்தில் இருந்து மதியமோ, பின்னேரமோ பஸ்ஸில் திரும்பும்போது ஐயா வீட்டருகே இறங்கி அன்றைய உதயன் பத்திரிகை பிரதி ஒன்றை பெற்றுக் கொள்வேன். ஒழுங்காக பத்திரிகை கிடைப்பதால் சில


கேணல் ஹரிஹரன்

சமயங்களில் பொருத்தமான ஆசிரிய தலையங்கங்களையும் எழுதி அனுப்புவேன். அதனால் பிரதம ஆசிரியர் கானமயில்நாதனின் வேலைப்பளு கொஞ்சம் குறையும். இந்தச் சமயத்தில்தான் சென்னையில் செய்தித் தேடலில் ஒரு விடயத்தில் புகுந்து விளையாடினேன். அந்த இளம் வயது அத்துறையில் அப்படி ஒரு 'ரிஸ்க்' எடுக்க என்னைத் தூண்டியது. இப்போது நினைத்துப் பார்த்தாலும் முட்டாள்தனமான - முன்யோசனை அற்ற - நடவடிக்கை அது என்று படுகின்றது.

ஆனால் பத்திரிகை துறையில் - குறிப்பாக ஜூனியர் விகடன் அலுவலகத்தில் எனக்கு அது நல்ல மதிப்பைப் பெற்றுத் தந்தது. செய்தித் தேடலுக்காக எந்த ரிஸ்க்கும் எடுக்கக் கூடிய துணிச்சலான பத்திரிகையாளன் என்ற பெயரை சக ஊடகவியலாளர்கள் மத்தியில் மட்டுமல்லாது, புலிகள், மற்றைய இயக்கங்கள், இந்தியப்படையினர் மத்தியிலும் அத்தகைய பெயரை அது வாங்கித் தரத் தவறவில்லை.

ஜூனியர் விகடன், ஆனந்த விகடன் நிறுவனம் 'ஜூனியர் போஸ்ட்' என்ற Tabloid சைஸ் செய்திப் பத்திரிகை ஒன்றை வாராந்தம் வெளியிட முன் வந்தது. அந்தப் பத்திரிகை நான்கு வாரங்களுக்கு ஜூனியர் விகடனுடன் இலவசமாக அறிமுகப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த முதலாவது இலவச இதழுக்கு முற்பக்க தலைப்புச் செய்தி ஒன்றை இலங்கை விவகாரத்தை வைத்து பரபரப்பாக வெளியிட வேண்டும் என்று ஜூவி ஆசிரியர் ராவ் விரும்பினார். மதனும் அதற்காக ஏதாவது தேடுங்கள் என்றார்.

எனக்கு ஒரு ஐடியா பிறந்தது. ரிஸ்கான விடயம். ராவ் ஸாரிடம் பேசினேன். 'பிரச்சினை வந்தால் பார்க்கலாம். முயலுங்கள்!' - என்று சொன்னார். ஆனந்த விகடன், ஜூனியர் விகடன் பிரதம ஆசிரியர் பாலசுப்ரமணியத்துடனும் ராவ் ஸார் பேசியிருப்பார் என்று நினைக்கிறேன்.


ஜூனியர் போஸ்ட் பத்திரிகை அச்சாவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் களத்தில் குதித்தேன். சிக்கலின்றி மீண்டேன். இனி செய்தி பிரசுரமான பின்னர் தான் பூதம் கிளம்பும் என்பது எனக்கு தெரிந்திருந்தது.

அந்தச் செய்தி ஜூனியர்போஸ்ட் பத்திரிகையில் வெளியாகும் அதே நாளில் உதயன் பத்திரிகையிலும் வெளியாக வேண்டும் என்று நான் விரும்பினேன். ராவ் ஸாருடன் பேசினேன். *"அதிலென்ன பிரச்சினை...? உங்கள் பத்திரிகை யாழ்ப்பாணத்தில்தானே... செய்தி அதிலும் வரட்டும். பிரச்சினை எல்லா இடத்திலும் ஒன்றாக வெடிக்கும்.... வெடிக்கட்டுமே. நல்லதுதானே"* - என்று பச்சைக் கொடி காட்டினார்.

அந்தச் செய்தியையும் அதே வழியில் உதயனுக்கு அனுப்பினேன் - முதல் நாள்.

அந்த என்வலப்பை அன்று கேணல் ஹரிஹரனின் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஒருவர் தம்முடன் எடுத்துச் சென்றார். ஆசிரியர் கானமயில்நாதன் அவரைத் தம் மேசைக்கு முன்னால் இருத்தி கதைத் தவாறே, என்வலப்பை உடைத்தார். உள்ளே இருந்த முதல் படத்தைப் பார்த்ததுமே கானமயில்நாதன் வெலவெலத்துப் போனார். படபடப்புடன் அந்த என்வலப்பை செய்திகளோடு மேசை லாச்சிக்குள் போட்டார். தமக்கு ஏற்பட்ட படபடப்பை காட்டாமல், இராணுவ அதிகாரியை அனுப்பி வைத்தார்.

அந்தச் செய்தி அடங்கிய என்வலப்பை இந்திய இராணுவத்தின் ஹெலி மூலம் அனுப்பி வைத்தமைக்கு அன்று முழு நாளும் என்னை அவர் வாய்க்குள் முணுமுணுத்தபடி பேசிக் கொண்டிருந்தார்


எஸ்.டி.எஸ்.சிவநாயகம்

என்று செய்தியாசிரியர் பத்மசீலன் பின்னர் என்னிடம் கூறினார்.

அப்படி நான் போட்டுடைத்த அந்தச் செய்தி என்ன? அது ஏற்படுத்திய பரபரப்பு யாது? அதனால் சென்னையில் ஏற்பட்ட நெருக்கடி என்ன?

அத்தகைய துணிச்சலை என் போன்ற பத்திரிகையாளர்களில் விதைத்த சிவநாயகம் ஐயாவின் நினைவுப் பகிர்வில் அதை விவரிப்பது பொருத்தமானதுதான்.

(வளரும்...)

THIYAHIE CHARITABLE TRUST

# T.C.T யின்

## கடந்தகால செயற்பாடுகளும் எதிர்கால நோக்கும்.....

















இலங்கையின் நல்லூர் நாவலர் வீதியிலே திரு. வாமதேவாவின் மகனாகப் பிறந்த உயர்திரு. தியாகேந்திரன் இயல்பாகவே பிறருக்கு உதவும் மனப்பான்மையைத் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் கடந்த 40 வருடங்களாக பல அறப்பணிகளைப் புரிந்து வருகிறார். இருந்த பொழுதிலும் கடைசி இரு பது வருடங்களாக தியாகி அறக்கொடை நிறுவனம் என்றழைக்கப்படுகின்ற சமூக அறக்கொடை நிறுவனமொன்றை ஏற்படுத்தி கடந்த காலத்தில் அவர்செய்த அறப்பணிகளில் சிலவற்றை இங்கு அறியத்தருகின்றோம்:–

◆ மந்திகை ஆதார வைத்தியசாலையின் Physiotherapy Centre 90 லட்சம் ரூபா செலவில் நிர்மா ணிக்கப்பட்டுள்ளது.

◆ தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் ஒரு கோடி ரூபா செலவில் 'தியாகேந்திரன் கிளினிக் மையம்' அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் புற்றுநோய் சிகிச்சை மையக் கட்டடம் அமைப்பதற்கென பல லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

◆ வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு 35 லட்சம் ரூபா செலவில் குடி நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அதனைப் பராமரிப்பதற்கும் 15 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

◆ ஜனாதிபதியின் COVID 19 நிவாரண நிதியத்திற்கென ஒருகோடி ரூபா அன்பளிப்பு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக கொரோனா நிவாரணமாக வடக்கு மற்றும் மலையகம் கொழும்பு என நாட்டின் பல பகுதிகளுக்கும் நிவாரணமாக மேலும் ஒரு கோடி ரூபா கொடுக்கப்பட்டது.

◆ ஸ்தாபகரின் சிந்தனையில் தோற்றம்பெற்றுள்ள நாய்கள் சரணாலயத்தின் உருவாக்கம் மற்றும் பராமரிப்புக்கு இதுவரை 3 கோடி ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

◆ விவசாயச் சங்கங்களின் வட்டுக்கோட்டை, உப்பு வயல் குளம் 20 லட்சம் ரூபா நிதியில் புனர மத்து விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டது.

◆ யாழ் நகரை அழகுப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஆரியகுளம் புனரமைப்புப் பணியானது 3 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

◆ வடமாகணத்தில் பாதுகாப்பற்ற பொதுமக்களின் பல கிணறுகள் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது.

◆ TCT Children Home 27 பிள்ளைகளுடன் கடந்த 15 வருடங்களாக இயங்கி வந்ததுடன் அவர்கள் மணவாழ்க்கையில் ஈடுபடும் வரை பராமரிக்கப்பட்டு வந்தனர்.

◆ பல வயோதிபர்களை வீட்டில் வைத்து பராமரிப்பதற்கு கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றன.

◆ வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களின் சில மருத்துவ தேவைகளுக்கும் சத்திரசிகிச்சைகளுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

◆ பொருளாதாரத்தில் நலிவடைந்த குழந்தைகள் இல்லாத தம்பதிகளுக்கு IVF சிகிச்சைக்கு பல லட்சம் ரூபா இதுவரைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

◆ செவிப்புலன் பாதிக்கப்பட்டு பேச்சாற்றலிலும் குறைபாடுடையவர்களுக்கு பல லட்சம் ரூபா செலவில் Hearing Solutions மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது.

◆ பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கு பல மில்லியன் ரூபா செலவில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

◆ மருத்துவத் தேவைகளுக்காகக் கொழும்புக்குச் செல்லும் நோயாளர்களுக்கு போக்குவரத்துச் செலவுகள் வழங்கப்பட்டுள்ளன.

◆ கொரோனா தனிமைப்படுத்தும் வைத்தியசாலைகளுக்கு உதவிகள் மற்றும் இரண்டு சலவை இயந்திரங்கள் (Hot Water Plants, wheelchair, trolleys, PCR tubes) போன்றனவும் வழங்கப்பட்டன.

◆ தியாகி வீடமைப்புத் திட்டத்தினூடாக பொருளாதாரத்தில் நலிவடைந்த 5 குடும்பங்களுக்கு பல மில்லியன் ரூபா செலவில் காணியுடன் வீட்டுத்திட்டம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

◆ சொந்தக் காணி இருந்தும் பொருளாதார வசதி இல்லாத மூவின மக்களுக்கும் வீடு கட்ட முடியாம லிருந்த 30 குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்குக் காணிகளும் வழங்கப்பட்டன.

◆ முழுமையாக இரண்டு முன்பள்ளிகள் பல லட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் பல வருடங்களாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன

◆ கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் நூலகம் 7லட்சம் ரூபா செலவில் புனரமைத்துக் கொடுக்கப்பட்டது.

◆ St. Patrick's College க்கு சர்வதேசதரத்திலான Tennis Court வடிவமைத்துக் கொடுக்கப் பட்டதுடன் நுழைவாயிலும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.


## ஸ்தாபகரின் மனதில் உள்ள எதிர்காலத் திட்டங்கள்

1. பின்தங்கிய கிராமங்களில் உள்ள வைத்தியசாலைகளை பல வழிகளிலும் அபிவிருத்தி செய்தல்.
2. வைத்தியசாலைகளில் காணப்படும் சிறுவர் விடுதிகளில் உள்ள சிறுவர்களின் உடல் உள வளர்ச்சிக்கு ஏதுவான வகையில் பூங்காக்களை அமைத்தல்.
3. யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இறந்தவர்களின் உடல்களைப் பேணுகின்ற பிணவறைகளை நவீன வசதியுடன் அமைத்துக் கொடுத்தல்.
4. குழந்தைகளற்றவர்களுக்கு இலவச சிகிச்சையளிப்பதற்கான அதிநவீன வைத்தி யசாலை ஒன்றை
பலகோடி ரூபா செலவில் நிர்மானித்தல்.
5. பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தல் (பூர்வாங்க வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன)
6. அண்மையில் மாண்புமிகு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் கையளிப்பதற்குத் தயார் நிலையில் உள்ளன. இதற்கென சில மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளன.
7. வீட்டுத்திட்டத்தின் ஒரு கட்டமாக இவ்வருடம் 50 வீடுகளைக் கட்டியோ அல்லது திருத்தியோ
கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளார்.
8. விசேட தேவையுடைய சிறுவர்களிற்கான பொழுதுபோக்கு மையம் ஒன்றை அமைத்தல்.
9. வைத்தியசாலைகளில் உள்ள நோயாளிகளை பராமரிப்பவர்கள் தங்குவதற்கென ஓய்வு மையம்(Relax Center) ஒன்றை அமைத்தல்.
10. கடந்த காலத்தில் அவர்செய்த அறப்பணிகளை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது எனினும் நாம் அறிந்த சில அறப்பணிகளை அவரின் விருப்பத்திற்கு மாறாக இங்கு பிரசுரிக்கிறோம்.

**'அறப்பணியே முதற்பணி'**

# T.C.T யின்

# கடந்தகால செயற்பாடுகளும் எதிர்கால நோக்கும்.....



- J/Holy Family Convent க்கு Basketball Court 6லட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- J/Hindu Ladies College க்கு ஏழு லட்சம் ரூபா செலவில் நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்டது.
- J/Vembadi Girls' High School மின்னிணைப்பிற்கு 3லட்சம்
- St. John Bosco பாடசாலைக்கு பல லட்சம் ரூபா செலவில் Stadium அமைத்துக் கொடுக் கப்பட்டுள்ளது.
- J/Central College க்குப் பல மில்லியன் ரூபா செலவில் நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்டது.
- J/St. John's College க்கு Tennis Court மற்றும் Basketball Court நிர்மானிப்பதற்கு 12 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.
- Mobile Ambulance Service ஆரம்பிப்பதற்காக மருத்துவ பீடத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட இசைநிகழ்ச்சிக்கு 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.
- அரசசேவையில் பணிபுரிபவர்களுக்கு 5 மில்லியன் ரூபா செலவில் அச்சிடப்பட்ட இரண்டாம் மொழி சிங்களப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.
- தாட்சாயிணி இலவச மருத்துவ சேவை கடந்த 15 வருடங்களாக இயங்கிவந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இலவச போக்குவரத்து வசதியுடன் நோயாளிகளுக்கு இதன்போது இலவச மருந் துகளும், இலைக்கஞ்சியும் வழங்கப்பட்டன.
- மகளிர் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 100 இற்கும் மேற்பட்ட திருமணமாகாத மகளிருக்கு மாதாந்தம் குறிப்பிட்ட தொகை வைப்பிலிடப்பட்டு அவர்களின் திருமணத்தின்போது மொத்தமாக வழங்கப்பட்டன.
- பொருளாதார சுமை காரணமாக பல்வேறு தனியார் மற்றும் நுண்நிதிநிறுவனங்களில் உயர்ந்த வட்டி வீதத்தில் கடன்பெற்றுத் திருப்பிச் செலுத்த முடியாதவர்களுக்காக ஏறக்குறைய ஒரு கோடி ரூபா செலுத்தப்பட்டுள்ளது.
- இன்றைய கொரோனா பெருந்தொற்றுக் காலப்பகுதியில் நல்லூர் உற்சவ காலத்தில் சிறிய வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியாமல் இருந்த 90 குடும்பங்களுக்கு இருபதாயிரம் தொடக்கம் ஐம்பதாயிரம் வரையாக மொத்தமாக பத்து லட்ச ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் போக்குவரத்து வசதியின்றி வெளிமாவட்டத்திற்குச் செல்ல முடியாதிருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல லட்சம் ரூபா செலவில் பிரயாண ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன் பல மாணவர்களுக்குத் தங்கியிருந்து படிப்பதற்கான வாடகைப் பணமும் கொடுக்கப்பட்டது.
- சுயதொழில் செய்வதற்கு ஆர்வம் உள்ளவர்களுக்கு நிதி உதவி செய்ததுடன் அதனை சந்தைப்படுத்துவதற்கு தனது வியாபார ஸ்தலத்தில் வாய்ப்பும் வழங்கியுள்ளார்.
- முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் தீயிட்டு எரிக்கப்பட்ட மீனவர்களின் வாடிகள் மீள நிர்மா ணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.
- சுயதொழில் முயற்சிக்காக நூற்றுக்கணக்கான தையல் இயந்திரங்களும் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.
- மாற்றுத் திறனாளிகளுக்கு 50 இற்கு மேற்பட்ட சக்கரநாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன
- முன்னாள் மறைந்த அமைச்சர் பெ.சந்திரசேகரன் அவர்களின் வேண்டுகோளிற்கு அமைய 500 மாணவர்களுக்கு மாதாந்த உதவிகள் பல வருடங்களாக் வழங்கப்பட்டு வருகின்றன.
- அமைச்சர் காமினி லொக்குகே அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களுக்கு பல லட்ச ரூபா மாதாந்த உதவித் தெகையாக வழங்கப்பட்டுள்ளன.
- அகில இலங்கை ரீதியாக மூவின மக்களையும் சேர்ந்த இருபதாயிரத்திற்கு மேற்பட்ட பயனாளிகள் எமது மாதாந்த உதவித் திட்டத்தில் பயனடைந்து வந்துள்ளனர். இதற்காக மாதாந்தம் இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. தென் இந்தியாவிலும் பல உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்குடன் எமது வியாபார ஸ்தாபனத்தில் 150 ஊழியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்
- கலைஞர்களுக்கு அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றும் முகமாக பல லட்சம் ரூபா கொடுக்கப்பட்டன வீட்டுத்திட்டத்தில் கலைஞர் ஒருவரும் உள்வாங்கப்பட்டுள்ளார்.
- எமது வட்டார வீதிகளை தூய்மைப்படுத்துவதற்கு ஒரு மில்லியன் ரூபா வழங்கியுள்ளார்.
- யாழ் நகர விளையாட்டுப் போட்டிகளை (tournament - matches) ஊக்கப்படுத்தும் நோக்குடன் மில்லியன் ரூபா வழங்கியுள்ளார்.

















# T.C.T யின் கடந்தகால செயற்பாடுகளும் எதிர்கால நோக்கும்























## 6 நாடுகளின் தூதர்களுடன் நிதியமைச்சர் விசேட சந்திப்பு

ஜப்பான் உள்ளிட்ட 6 நாடுகளின் தூதுவர்களுடன் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார்.

குறித்த சந்திப்பில் சலுகை முறையில் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை, இலங்கைக்கு வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டதாக இலங்கைக்கான இந்தோனேஷியத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்கும் முதலீடு செய்வதற்கும் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக ஜப்பானியத் தூதுவர், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு இதன்போது உறுதியளித்துள்ளார்.

## இலங்கையில் கட்டாயமாகும் கொவிட் தடுப்பூசி சான்றிதழ்

### அரசாங்கம் முக்கிய அறிவிப்பு

இலங்கையில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் போது வழங்கப்பட்ட சுகாதார அட்டையை தம்முடன் வைத்துக் கொள்வதைக் கட்டாயமாக்குவதற்கு கொவிட் தடுப்பு செயலணி அவதானம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய அரச நிறுவனங்கள் போன்று சுப்பர் மார்க்கெட்களில் நுழைவதற்கு இந்த அட்டையைத் தம்முடன் வைத்திருப்பது மிகவும் முக்கியம் என சுகாதார பிரிவு பிரதானிகள் மற்றும் பல்வேறு தரப்பினர் அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டி யுள்ளனர். இது தொடர்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கொவிட் தடுப்பு பிரிவு கூட்டத்தில் கலந்துரையாடப் பட்டது. கொவிட் தடுப்பிற்காக எதிர்வரும் நாள்களில் சட்டங்களை அறிமுகப்படுத்தி வைக்கவுள்ளதாக ஜனாதிபதி பிரதான ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

## மத்திய அதிவேக வீதியில் எரிபொருள் மோசடி!

### எழுவர் கைது

சீனாவால் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும், மத்திய அதிவேக வீதியில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போது 6 வாகனங்களுடன் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீதி கட்டுமானத்துக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களில் இருந்து எரிபொருளைத் திருடும் இந்த நீண்டகால மோசடியை சிறப்பு அதிரடிப்படை முறி யடித்துள்ளது.

இந்தநிலையில் வெயங்கொட மற்றும் வந்துராவ பகுதிகளுக்கு இடையே உள்ள மத்திய அதிவேக வீதி நுழைவாயிலில் எரிபொருள் நிரப்பப்பட்ட பவுஸருடன் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வெயங்கொடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# மெய்நிகர் வகுப்பறை 31

## Online Classroom

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**கொவிட் - 19 பின்னரான கல்வியில் கவனிக்க வேண்டியவை.**

உலகளாவிய ரீதியில் கொவிட் தொற்று நோய் பாதிப்புகள் கல்வித்துறையில் ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கங்கள் பற்றி மெய்நிகர் வகுப்பறையில் விவாதித்து வருகின்றோம். இந்தக்காலகட்டம் கல் வித்துறையில் கடுமையான சவால்களையும் புதிய வெளிச்சத்தையும் வெளிப்படுத்தியுள்ளது. கொவிட் - 19 ஏற்படுத்தியுள்ள சூழல் கல்வி வழங்கல் மற்றும் கற்றல் நிலைமைகளில் ஏற்றத் தாழ்வுகளைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளன. இது ஒரு தெளிவான உலக வரைபடத்தை வழங்கியுள்ளது. இதனடிப்படையில் நாம் முன்னோக்கி என்ன படிகள் எடுக்க வேண்டும் என்பதையும் துலக்கமாகக் காட்டுகிறது.

உலகெங்கும் பாடசாலைகள் மூடப்பட்டமையால் 1.5 பில்லியனுக்கும் அதிகமான மாணவர்களின் கற்றல் தடைபட்டுள்ளது. கொவிட் – 19 பொதுக் கல்விக்கு ஆபத்தான தருணங்களைக் கொண்டு வந்துள்ளது தொற்றுநோய் பாரம்பரிய கற்றல் மற்றும் கற்பிப்பதில் இருந்து ஒரு பெரிய மாற்றத்தை கட்டாயப்படுத்தியுள்ளது வறுமையில் வாடும் குழந்தைகளுக்கு இது ஒரு பெரிய பிரச்சினை.

யுனெஸ்கோ நிறுவனம் இதுவிடயம் தொடர்பாக அக்கறைகொண்டுள்ளது. கொவிட் - 19 நெருக்கடி மற்றும் அதன் பின்விளைவுகளைக் கடந்து




செல்வதற்கான யோசனைகளை முன் வைக்கிறது. இதில் கல்வி அமைப்புகள் கொவிட் 19 முன்னர் இருந்த நிலைமைக்கு திரும்புவதில் பல சவால்களைக் கொண்டுள்ளன என்பது தெளிவாகிறது.

கொவிட் 19 தாக்கத்துக்குப் பின்னரான பொதுக்கல்வி மேம்ப்பாட்டில் பல விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

1. கல்வியை பொது நலமாக அரசுகள் வலுப்படுத்த உறுதிகொள்ள வேண்டியிருக்கும். கொவிட் 19 கல்வி ஏற்றத் தாழ்வை அதிகரித்திருக்கிறது. ஒருசிலருக்கு மட்டுமே கல்வி கிடைக்கின்ற நிலை உருவாகியிருப்பதால் இந்த ஏற்றத்தாழ்வு என்றுமில்லா அளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே கல்வி எல்லோருக்கும் சமமானதாகக் கிடைக்க அரசுகள் பாடுபட வேண்டும். கல்வி என்பது ஒரு நாட்டின் அரண் என்ற விடயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.



2. பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்கள் கல்வி பெறும் உரிமையை விரிவுபடுத்துவதன் மூலம் அதன் முக்கியத்துவத்தை கல்விகற்கும் வயதினருக்கு உணர்த்துதல் வேண்டும். இங்கு இணைப்பு, அறிவு பகிர்வுக்கான உரிமை மற்றும் தகவலுக்கான அணுகல் போன்ற விடயங்கள் உரிமையாக்கப்பட வேண்டும். இது விடயமான உலகளாவிய பொது கலந்துரையாடல் உருவாக்கப்பட்டு கல்வி உரிமை விரிவாக்கப்பட வேண்டும்.

3.கொவிட் 19 பின்னரான நிலைமையில் ஆசிரியர் தொழில் பற்றிய புதிய வரையறையை உருவாக்க வேண்டியுள்ளது. இங்கு ஆசிரியர் ஒத்துழைப்பை அவர்களை மதிப்பிடுதல் போன்ற பல விடயங்களில் மீள்வரையறை செய்யப்பட வேண்டும். தற்போது கல்வியியலாளர்களை பழமையான வரையறைகளில் இருந்து கொண்டு புதுமையான நிலைமைக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவது கடினமானதாக உணர்கிறார்கள். இன்றைய சூழலில் கல்வியாளர்களுக்கு தன்னாட்சி நிலைமையை அதிகரிக்க வேண்டியுள்ளது. அதே வேளை வரையறைகளையும் கொண்டிருக்க வேண்டியுள்ளது. அதாவது நெகிழ்வுத்தன்மை அதிகரிக்க அதற்கான மதிப்பீடுகளும் தெளிவாக்கப்பட வேண்டியுள்ளது.

4. புதிய கல்வியில் மாணவர், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளின் பங்கேற்பு மற்றும் உரிமைகளை ஊக்குவிக்கும் அதே வேளை சமூகமயமாதல், அரசியல் போன்ற விடயங்களிலும் ஈடுபாட்டை அதிகரிக்க வேண்டும். நீதி மற்றும் ஜனநாயகக் கொள்கைகளில் பங்கேற்பதை ஊக்கப்படுத்த வேண்டும். மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கல்வியில் ஏற்படும் மாற்றத்தில் விரும்பத்துடன் இணைய வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

5. கொவிட் – 19 பின்னர் கல்வி மாற்றமடையும் போது ஏற்கனவே உள்ள பாடசாலைகள் கல்விக்கூடங்கள் வழங்கிக்கொண்டிருக்கும் சமூக வெளியைப் பாதுகாக்கவேண்டும். அந்தப்பண்புகளைத் தொடர்ச்சியாகக் கையளித்து வருவது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

6.கொவிட் 19 பின்னரான சூழலில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு இலவச மற்றும் திறந்த தொழில்நுட்பங்களைக் கிடைக்கச் செய்வதற்கான அதிகளவு கரிசனை வழங்கப்பட வேண்டியுள்ளது. அதாவது திறந்த கல்வி வளங்கள் மற்றும் திறந்த டிஜிற்றல் அணுகல் கருவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக கல்வியியலுக்கு வெளியே கட்டப்பட்ட தொழில்நுட்ப உள்ளடக்கத்துடன் கல்வி செழிக்க முடியாது அதனால் டிஜிற்றல் தளங்கள் ஆசிரியர் மாணவர் அணுகக்கூடியதானதாக இருப்பதற்கான ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

7. புதிய நிலைமைக்கேற்ப பழைய பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. பாரம்பரிய கல்விமுறையில் காணப்பட்ட பாடத்திட்டத்தை கலப்பு கற்றல் (Blended Learning) அல்லது டிஜிற்றல் கல்வியில் நடைமுறைப்படுத்தும்போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றமை சுட்டிக்காட்டப்படுகிறது. அதனால் புதிய சூழலுக்கான புதிய பாடத்திட்டம் உருவாக்க வேண்டியுள்ளது.

8. பொதுக் கல்விக்கான அதிகளவு நிதியொதுக்கீடுகளில் அரசுகள் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கல்விக்கான உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதியைப் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. தேசிய அரசுகள், சர்வதேச நிறுவனங்கள், மற்றும் அனைத்து கல்வி மற்றும் மேம்பாட்டு பங்காளிகள் பொதுக் கல்வி, அனைவருக்கும் கிடைப்பதற்கான நிதியை திரட்டி கல்வியின் எதிர்காலத்திற்கான பாதுகாப்பான நிலைமையை உருவாக்க வேண்டியுள்ளது.

9. சமத்துவமின்மையின் தற்போதைய நிலைகளை முடிவுக்கு கொண்டு வர உலகளாவிய ஒற்றுமை முன்னேற்றப்பட வேண்டும். உலகளாவியரீதியில் சமநிலையின்மை நிலவுவதால் சமூகங்கள் சுரண்டுகின்றன.

கொவிட் - 19 கல்வி மீது உலகநாடுகளின் உண்மையான சவாலையும் உண்மையான பொறுப்பையும் உணர்த்துகிறது. அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புகள், சிவில் சமூகம் ஆகியன அந்தப் பணியை செய்தாக வேண்டியுள்ளது.

(தொடரும்...)

# ஹிஷாலினிக்கு நீதிகோரி நேற்றும் போராட்டங்கள்





உயிரிழந்த டயகம பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கோரி நேற்றும் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் , சிறுமி ஹிஷாலிணியின் பிரேத பரிசோதனை சட்டரீதியாகவும் முறையாகவும் இடம்பெற்று அவரின் உயிரிழப்புக்கு சரியான நீதி கிட்ட வேண்டும், மலையகத்தின் எதிர்கால சிறுவர்களின் உயிர் மற்றும் உரிமை பாதுகாப்புக்கு சிறுமி ஹிஷாலினியின் மரணம் ஒரு ஒளியை வழங்க வேண்டும், சிறுமியின் ஆத்மா சாந்தியடைய வேண்டும், அவரின் பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து, நேற்றுக் காலை நுவரெலியா மாவட்டத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனடிப்படையில், பூண்டுலோயா நகரில் பூண்டுலோயா தோட்ட மக்கள், நேற்று காலை ஒருமணி நேரம் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். பதாதைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பி பூண்டுலோயா நகரில் ஊர்வலமாக சென்றனர்.

# மட்டு. மீனவர்கள் முரல் மீன் பிடியில் ஈடுபட அமைச்சர் டக்ளஸின் முயற்சியால் ஏற்பாடு

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழிலாளர்கள் முரல் மீன் பிடியில் ஈடுபடுவதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முரல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை காரணமாக, குறித்த தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

குறித்த விடயம் தொடர்பாக, கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டில் பல்வேறு பொருளாதாரச் சவால்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் மேலும் பாதிப்புக்களை உருவாக்கும் வகையில் மீன்பிடித் தடைகள் அமையக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, முரல் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை மட்டக்களப்பு கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 86

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**259. நீங்கள் ஆணித்தரப்படுத்தும் இந்த ஏகோபித்த தலைமை என்பது எங்களது விடுதலைப் போராட்டத்தை எவ்வளவு பாதித்தது? விடுதலைப் புலிகள் அப்படியே பிடிவாதமாக நின்றார்களா?**

திம்பு மாநாடுகளின் பின் இந்தியாவின் பேச்சு வார்த்தைகள் ஜே.ஆருடனும் கூட்டணியினருடனும் தொடர்ந்தன. இதன் ஓர் அங்கமாக எம்.ஜி.ஆர்., ராஜீவ் காந்தி கேட்டதன்படி பிரபாகரனையும் பாலசிங்கத்தையும் பெங்களூருக்கு இரண்டாவது சார்க் மாநாடு நடந்தபோது அழைத்திருந்தார். ஆனால் பிரபாகரன் யாரையும் சந்திக்காது எம்.ஜி.ஆருக்கும் அறிவிக்காது யாழ்ப்பாணம் திரும்பினார். வந்ததின் பின்தான் விடுதலைப் புலிகளின் அதிகாரத்தையும் ஆளுமையையும் நிலை நிறுத்த சக போராளிகளை அழிக்கும் படலங்களை நடத்தினார்கள். இந்தத் தொடரின்போது இணைக்கப்பட்ட படங்களில் கைகோர்த்து நின்ற ஒவ்வொருவரும் ஒன்றன் பின் ஒன்றாக மறைந்தனர். அதிலிருந்து அவர்கள் அந்த நிலைப்பாட்டையே தொடர்ந்தனர்.



உதாரணத்துக்குப் பார்த்தால் திம்பு மாநாட்டில் ஜே.ஆரின் பிரதிநிதி, விடுதலைப் புலிகளை மாத்திரமல்ல, மற்ற எல்லா விடுதலை இயக்கங்களும் பயங்கரவாதிகள், அவர்களுடன் பேசமாட்டோம் என்று மறுக்க, கூட்டணியினர் அவர்கள் எல்லோரும் உள்ளடக்கப்படவேண்டும் என்று ராஜீவ் காந்தியுடன் பேசினார்கள். பின்னர் எல்லோருமே உள்வாங்கப்பட்டு திம்புத் தீர்மானமும் தரப்பட்டது. அந்த மாநாட்டில் கூட்டணியினர், தமிழர்களுக்கான பெரும் நோக்கில் தாங்கள் சமர்ப்பித்தவை எல்லாவற்றையுமே எல்லா விடுதலை இயக்கங்களையும் சேர்த்து தமிழர் சார்பாக தான் கையளித்தார்கள்.

அந்த ஒரு “தமிழர் சார்பான” என்ற அரசியல் சிந்தனை, பேச்சுவார்த்தைக்கு பிரேமதாஸா அழைத்தபோது அது எல்லோரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று சொல்ல லண்டனிலிருந்த மதியுரைஞருக்கே இருக்கவில்லை.

**260. அது ஏன்?**

பின்பு பேச்சுவார்த்தைகள் நோர்வேயுடன் தொடக்கப்பட்டபின் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேசத்தின் அழுத்தங்கள் இருந்தன. அவை முக்கியமாக அரசியல் தீர்வு மற்றவர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும், சிவில் சமூகங்களின் பங்களிப்பு பெரிதுபடுத்தப்படவேண்டும் என்பவை போன்றவை. இவற்றைச் சமாளிக்கவே, அவர்கள் தேர்தலின்போது தமது ஆதரவாளர்களை நிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். அவர்கள்( தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடுத்தப்படவில்லை.

பின்னர் இடைக்கால சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு சந்திரிகா இணங்கி வர, விடுதலைப் புலிகள் தாங்கள் பங்குபற்றுவதாக இருந்தால், அது விடுதலைப் புலிகள் மட்டுமே ஏக பிரதிநிதிகள், அவர்களுடன் மட்டுமே பேசப் படவேண்டும் என்ற நிபந்தனையை முதலாவதாக பாலசிங்கத்தின் மூலமாக வைத்தார்கள். இவற்றினால்தான் மஹிந்த ராஜபக்ஷவின் “பயங்கரவாத” முத்திரைகள் இலகுவானது. அதே பிரித்தாளும் தந்திரம்தான் கோட்டாபய அழைப்பிலும் தொங்கி நிற்கிறது.

**261. நீங்கள் எதற்கும் விடுதலைப் புலிகளைக் குறை கூறுவது போல தென்படுகின்றதே. குமரப்பாவோடு கூட தமது இன்னுயிரை தந்த இளைஞர்களின் ஈகங்களை உணர்வுபூர்வமாகப் பார்க்கவில்லையே?**



குமரப்பாவோடு தங்கள் உயிர்களை இனவிடுதலைக்காக தியாகம் தந்தவர்களை மாத்திரம் அல்ல, சிவகுமாரன் தன்னை ஈகமாகக் கொடுத்த நாள்களிலிருந்தே விடுதலைப் போராட்டத்தில் மடிந்து போன ஒவ்வொருவரையும் மனப்பூர்வமாக நினைந்து, நாங்கள் பெற்ற அறுவடைகளை எண்ணி வருந்துகிறோம். ஆரம்ப காலத்தில் இந்த இளைஞர்கள்தான் எங்களின் எதிர்காலம் என்று அவர்களை எல்லாம் ஊக்கிவிட்டமையை எண்ணி மனச்சாட்சி பல சமயங்களில் சுட்டுச் செல்லும். இன்னுமொரு விதத்தில் பார்த்தால், அக்கால கட்டத்தில் பங்குபற்ற வந்த பலர் நேரடியாக விடுதலைக் குழுக்களுடன் ஈடுபடாவிட்டாலும், ஏதோ ஒரு விதத்தில் எங்களது எதிர்காலங்களையும் வாழ்க்கைகளையும் தொலைத்தவர்களாகவே இருக்கிறோம். அதனை ஒட்டி நான் கிஞ்சித்தும் கவலைப்பட்டவனும் அல்லன்.



இதேபோல் காலைக்கதிரின் தலையங்கம் குறித்து எழுதியபோது சிலர் அபிப்பிராயங்கள் சொன்னார்கள். இவை ஆசிரியரின் அனுபவத்தை, விடுதலைக் காலங்களில் அவரிடம் இருந்த ஈடுபாட்டை, அவருக்கு பலரிடமிருந்த தொடர்புகளை,எல்லாம் விவரித்த, இந்தியாவின் இராஜதந்திரம் தோற்று விட்டதற்கு இந்தியாவே காரணம், அதனை முழுதுமாக விடுதலைப் புலிகளின் மீது போட முடியாது என்று சொன்னார்கள்.

அவர்களுக்கு நான் தந்த பதில், அவர் ஊடகவியலாளர், செய்திகள் சேகரிக்க தொடர்புகளை மேற்கொண்டவர், அவரது பிரதான பணி அந்தச் செய்திகளை சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் கொண்டு செல்வது, மக்கள் உட்பட. இவற்றினூடாக ஓர் அபிப்பிராயம் வரலாம். ஆனால் எடுக்கப்படும் தீர்மானங்களை அவற்றின் நிகழ்வுகளை தலைகீழாகக்குவதையோ, இன்னொரு விதத்தில் துணிச்சலாக முன்னேறுவதையோ தடுக்க முடியாது.

அந்த முறையில் என்னை விட களத்தில் இருந்த சிவில் சமூக அமைப்புகள், இந்திய அதிகாரிகள், இந்திய இராணுவத்தினர், விடுதலைப் புலிகளின் தளபதிகள், மற்றைய விடுதலைக் குழுக் கள் எல்லோரிடமும் தொடர்புகள் இருந்து, அவற்றை ஊடகத்தின் ஆசானாகக் கொண்டு சென்று சேர்த்தார்.

எனது பணி, நான் முன்னர் கூறியமாதிரி வரலாற்றினூடாக, ஒரு கருத்தாக்கத்தை தருவது தான். இதில் யாரையும், எதையும் எதிர்பார்த்துக் குறை கூறவேண்டியது இல்லை. எனது கருத்தாக்கத்துக்கு எதிர் வினைகள் செய்யலாம். ஆனால் வரலாறு பிழை எனக் கருதி யாராவது – ஆசிரியர் கூட – அறிவித்தால் அதனைத் திருத்தி மாற்றி கொள்ளலாம்.

இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து, இந்தியா தனித் தமிழீழம் அமைப்பதற்கு ஆதரவு தராது என்பது காரணமாகவும், விடுதலைப் புலிகள் அதை அமைக்க வேண்டும் என்ற திடசங்கற்பத்தில் இருந்ததாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கான யதார்த்த நிலைகள் சர்வதேச அடிப்படையில் கணக்கெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்தியாவை விலத்தி இந்தியக் கடல் பரப்பிலோ வெளியே ஏதாவது இன்னுமொரு நாடு அனுசரணையில், அதுவும் இந்தியாவை எதிர்த்து நிற்குமா என்பதை தெரிந்து கொண்டு, அவர்களின் ஆதரவில் இயங்கியிருக்க வேண்டும். ஆனால் ஆளவேண்டும் என்ற அரசியலே முன்னெடுக்கப்பட்டதான அபிப்பிராயம்தான் மேலோங்கியிருந்தது.

விடுதலைப் போராட்டம் என்பது ஒரு கட்டுமரத்தில் ஏறி, மீன் பிடிக்க சிலர் போவதுபோல் அல்ல. அது பெரும் சாகரங்களை எதிர்கொள்ளக் கூடிய கப்பல்களின் துணைகளோடு கடல்களைக் கடக்கும் தென்பு வேண்டும். சாணக்கியம் இருக்கவேண்டும். அரசியல் என்பது விடுதலைப் போராட்டத்தின் சிறு அலகு மட்டுமே. ஆனால் அதை அரசியலாக்கினால் விளைவுகள் விபரீதமாகிவிடும். அவை பிரேமதாஸாவின் பேச்சு வார்த்தைகளின் போது மதியுரைஞருக்கு தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அவர் விடுதலைப் புலிகளை அரசியல் பாதையில் நடத்தினாரோ அல்லது இந்தியாவை அனுப்ப வேண்டும் என்று அவசரங்களில் விடுதலைப் புலிகளின் நெருக்குதலால் சகதி என்று தெரிந்தும் இறங்கிரோ என்பதை பின்வந்த காலங்கள் எடுத்துக் கூறின.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் இன்னும் சில நாள்களில் கோரத் தாண்டவம் ஆடும் கொரோனா!

## வைத்தியசாலைகளுக்கு வெளியே நோயாளர் கட்டிலுக்காக ஏங்கியபடி காத்திருக்கப் போகின்றீர்கள் என மருத்துவ வல்லுநர் அபாய எச்சரிக்கை

இன்னும் சில நாள்கள்தான். வைத்தியசாலைகளுக்கு வெளியே, நோயாளர் கட்டிலுக்காக ஏங்கியபடி வாகனங்களிலும் மரத்தடிகளிலும் வீதிகளிலும் நீங்களும் உங்களின் அன்புக்குரியவர்களும் காத்திருக்கப் போகின்றீர்கள். ஒவ்வொரு வைத்தியசாலையாக இடந்தேடி அலைந்து கதறப் போகின்றீர்கள். 30 வருடப் போரைவிடவும் சுனாமியை விடவும் கொடூரமாக கொரோனா உங்களை காவு கொள்ளப்போகின்றது. தயாராக இருங்கள். வினை விதைத்தவன் வினை தான் அறுக்கவேண்டும்.

– இவ்வாறு விரக்தியடைந்த மற்றும் சோர்வடைந்த சுகாதாரப் பணியாளர்களின் சார்பாக கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் நாட்டு மக்களின் பொறுப்பின்மை தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவு பொது மருத்துவ வல்லுநர் தனது கருத்தைப் பதிவிட்டுள்ளார்.

அவரது முகநூலில் பதிவிட்டுள்ள அனைவரையும் சிந்திக்கவைக்கும் அந்தப் பதிவின் முழு விவரம் வருமாறு:

கொரோனா இல்லா இலங்கையில் வாழ்ந்து கொண்டாடித்திரியும் இலங்கையர்களாகிய உங்களுக்கு, அதே இலங்கையின் வைத்தியசாலைகளில் கொரோனா நோயாளிகளின் மத்தியில் விழி பிதுங்கி மூச்சுத்திணறும் சுகாதாரப் பிரிவினரின் சார்பாக சின்ன தகவலொன்றைத் தர விரும்புகின்றேன்.

மருத்துவராக சேவை செய்யத் தொடங்கிய இந்தப் பதினாறு வருடங்களில் நோயாளிகளுக்கு தீவிர சிகிச்சை படுக்கை கேட்டு ஒவ்வொரு வைத்தியசாலையாக தொலைபேசி அழைப்பு எடுத்து பலமுறை கெஞ்சியதுண்டு.

ஆனால், ஒருபோதும் நோயாளிக்குரிய சாதாரண கட்டிலில் இடமொன்றை கேட்டு கெஞ்சியதில்லை, அதையும் செய்ய வைத்துள்ளது இந்தக் கொரோனா.

வைத்தியசாலைகள் நோயாளிகளினால் நிரம்பி வழிகின்றன. இனிவரும் நோயாளிகளை எங்கு அனுமதிப்பது என்று தெரியாமல் நாங்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறோம்.

நேற்றுக் காலையிலிருந்து ஒரு நோயாளிக்கு ஒக்சிசன் சிகிச்சை வசதி கட்டில் தேடி ஒவ்வொரு வைத்தியசாலையாக தொலைபேசி அழைப்பெடுத்து கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவு ஊழியர்களும் மனதாலும் உடலாலும் களைத்துவிட்டார்கள். வைத்தியசாலை ஊழியர்களிடையே கொரோனா ஒரு காட்டுத்தீயைப் போல பரவிக்கொண்டிருக்கின்றது. வேலைப் படையின் அளவு குறைந்துகொண்டே போகின்றது.

'கொரோனா', 'கொரோனா' என்றே வைத்தியசாலைகள் எங்கும் எதிரொலிக்கின்றது. வீட்டுக்கு வந்தாலும், வரும் அழைப்புகளில் 90 வீதத்துக்கும் மேலானவை கொரோனா அழைப்புகளாகவே இருக்கிறது.

ஆனால், இலங்கைக் குடிமக்களாகிய நீங்கள் என்ன செய்கிறீர்கள்? பொறுப்புடன் நடக்கின்றீர்களா? இல்லவே இல்லை. பற்றியெரியும்போது பிடில் வாசிக்கும் நீரோக்களைப் போல், நீங்கள் அலட்சியமாகப் பொறுப்பற்று நடக்கின்றீர்கள்.

உணவகங்களில் கூட்டம் நெரிக்கின்றது. பிறந்தநாள் விழாக்கள், திருமண வைபவங்கள் என்பவற்றில் கூட்டம் அலைமோதுகின்றது.

தெருவோரக்கடைகளில் நின்று தின்பதற்கென்றே சைக்கிள் முதல் ஆடம்பரக் கார் வரை வாகனங்களில் கூட்டம் வருகின்றது. முகக்கவசமின்றி வீதியோரங்களில் நின்று கூச்சலிடுகின்றனர் இளைய சமுதாயம்.

இன்னும் சில நாள்கள்தான். வைத்தியசாலைகளுக்கு வெளியே, நோயாளர் கட்டிலுக்காக ஏங்கியபடி வாகனங்களிலும் மரத்தடிகளிலும் வீதிகளிலும் நீங்களும் உங்களின் அன்புக்குரியவர்களும் காத்திருக்கப் போகின்றீர்கள்.

ஒவ்வொரு வைத்தியசாலையாக இடந்தேடி அலைந்து கதறப் போகின்றீர்கள். 30 வருடப் போரைவிடவும் சுனாமியை விடவும் கொடூரமாக கொரோனா உங்களை காவு கொள்ளப்போகின்றது. தயாராக இருங்கள். வினை விதைத்தவன் வினை தான் அறுக்கவேண்டும் – என்றுள்ளது.

## யாழ்.பல்கலை ஊடகத்துறை மாணவன் நிலாவின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல்



சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவன் சகாதேவன் நிலக்சனின் (நிலா) 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் நிலக்சனின் உருவப் படத்துக்கு அவரது பெற்றோர் மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தி சுடரேற்ற அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து ஊடகத்துறை சமூகத்தினரும் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடகக்கற்கைமாணவனும் 'சாளரம்' சஞ்சிகையின் ஆசிரியரும் யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் முன் னாள் தலைவருமான சகா தேவன் நிலக்சன், 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி யாழ். கொக்குவிலிலுள்ள அவரது வீட்டில் இருந்த வேளை, அவரது வீட்டுக்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுதாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர், சகோதரன் ஆகியோர் முன்னிலையில் சுட்டுப் படுகொலை செய்தனர்.

நிலக்சனைப் படுகொலை செய்த குற்றவாளிகள் இன்னமும் கைதுசெய்யப்படவில்லை. நிலக்சனின் படுகொலைக்கு இன்னமும் நீதி கிடைக்கவும் இல்லை.

## வடமராட்சி கடலில் கடற்படை அதிரடி வேட்டை; 109 கிலோ கஞ்சாவுடன் இருவர் சிக்கினார்கள்





கடற்படையினால் தொண்டைமானாறு பிரதேசத்திலிருந்து மாமுனை வரையான கடற்பகுதியில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 109 கிலோ 150 கிராம் கேரளா கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை பி 177 கடலோர பாதுகாப்பு கப்பல் மூலம் தொண்டைமானாறு முதல் மாமுனை கடற்கரையில் சனியிரவு மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது குறித்த இரண்டு சந்தேகநபர்கள், 2 பொதிகளில் அடைக்கப்பட்ட கேரள கஞ்சா மற்றும் டிங்கி படகு ஆகிய–வற்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பகுதியில் பி 015 கடலோரப் பாதுகாப்பு ரோந்துப் படையினர் நடத்திய மேலதிக தேடுதல் நடவடிக்கையின்போது, அப்பகுதியில் கடலில் மிதந்த நிலையில் காணப்பட்ட கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மொத்தமாக 109 கிலோ 150 கிராம் கேரள கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நடவடிக்கையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி ரூபா 3 கோடி 20 இலட்சத்துக்கும் அதிகமானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 28 வயதுடைய பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களையும் கைப்பற்றிய பொருள்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக, பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையைக் கடற்படையினர் மேற்கொண்டனர்.

## மாகாணங்களுக்கு இடையிலான பொதுப்போக்குவரத்து ஆரம்பம்

நீண்ட நாள்களுக்குப் பின்னர் மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்கு வரத்து சேவைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி குறித்த பொதுப்போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைய மாத்திரம் பஸ்களில் பயணிகளை அனுமதிக்க சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கு மேலதிகமாகப் பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ்களைக் கண்காணிப்பதற்குப் பொலிஸாரின் உதவியும் பெறப்பட்டுள்ளது – என்றார்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான, மாகாணங்களுக்கு இடையிலான சகல பஸ்களும் இன்று முதல் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன என்று அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இன்று முதல் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தை தனியார் பஸ்களும் ஆரம்பித்துள்ளன என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, ஒழுங்கு முறையில், ரயில் சேவைகளும் நேற்று முதல் இடம்பெறுகின்றன என்று ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது.

## பூப்புனித நீராட்டு விழாவில் பங்கேற்ற 85 பேருக்குக் கொரோனாத் தொற்று!

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறி களுத்துறை மாவட்டத்தின் பேருவளை, பாயாகல – கொரகதெனிய பிரதேசத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நிறுத்தப்பட்ட பூப்புனித நீராட்டு விழாவில் கலந்துகொண்ட 85 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இந்தப் பூப்புனித நீராட்டு விழா கடந்த 24 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், அதற்கு உதவி புரிவதற்காக 35 பேர் அங்கு சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் குறித்த நிகழ்வு நிறுத்தப்பட்டதால், வீட்டு உரிமையாளரினால் சமைக்கப்பட்ட உணவுகள் பார்சல் மூலம் நிகழ்வுக்காக அழைக்கப்பட்டிருந்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வுக்காகச் சமைக்க வந்திருந்தவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியான நிலையில், அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 85 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் உள்ள 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.




# 2024ஆம் ஆண்டில் ஆட்சியை கைப்பற்ற ரணில் திட்டம் வகுப்பு



2024 ஆம் ஆண்டில் ஆட்சியை கைப்பற்றும் வகையில் 75 திட்டங்களை ரணில் விக்கிரமசிங்க வகுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 75 ஆவது சம்மேளனம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள நிலையில், நேற்று ஆட்சியை கைப்பற்றுவதற்கான உறுதியை அனைத்து உறுப்பினர்களும் பெற்றுக் கொண்டனர்.

மேலும் அன்றைய தினத்திலிருந்து ஆட்சியை கைப்பற்றும் திட்டங்களை நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் ஆரம்பிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்த வலுவான கூட்டணி தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கரு ஜயசூரிய , மங்கள சமரவீர மற்றும் குமார் வெல்கம ஆகியோர் தற்போது பல்வேறு மட்டத்தில் செயற்பட்டு வருகின்றனர்.

மறுபுறம் சம்பிக ரணவக்கவும் ஐக்கிய மக்கள் சக்திக்குள் இருந்தாலும் தனது 43 ஆவது செயலணி என்ற அமைப்பு ஊடாக மாற்று அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். இறுதியில் இவர்களையும் கூட்டணிக்குள் உள்வாங்குதற்கு நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதிய கூட்டணிக்கான செயற்பாடுகளை ருவான் விஜேவர்தன, வஜிர அபேவர்தன் மற்றும் பாலித ரங்கே பண்டார ஆகியோர் முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கையின் தேசிய அரசியலில் 2024 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் ஒரு பெரும் சமராகவே அமையப்போகின்றது. இந்த தேர் தலை மையப்படுத்தி பிரதான கட்சிகள் அனைத்தும் பல வியூகங்களை வகுத்து வருகின்றன.

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியை மீண்டும் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவும் தீவிர மாக செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால் கூட்டணிக்குள் உள்ள பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அண்மைகால வெளிப்படுத்தல்கள், தொகுதி அமைப்பாளர் கூட்டங்கள் மற்றும் சந்திப்புகள் அனைத்துமே அடுத்த தேர்தல்களில் மாற்று அரசியல் தீர்மானத்துக்கான வெளிப்பாடுகளையே கொண்டுள்ளன.

மறுபுறம் 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அ ரசாங்கத்தைத் தோற்றுவித்த அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளன.

இது ஆளும் கட்சிக்கு சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி கூட்டணியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. பல தரப்புடன் ஏற்கனவே கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## நாகையா சண்முகலிங்கம்

**(பொடியர் மாமா)**

(ஓய்வுநிலை கல்வித் திணைக்கள அலுவலக உதவியாளர்)



**அன்னை மடியில்**
**09.07.1949**

**ஆண்டவன் அடியில்**
**30.07.2021**

யாழ். குப்பிழான் காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், குப்பிழான், முல்லைத்தீவு ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகவும் கொண்டிருந்த நாகையா சண்முகலிங்கம் (பொடியர் மாமா) கடந்த வெள்ளிக்கிழமை (30.07.2021) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகையா – சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும், காலம் சென்ற வைத்திலிங்கம் – சரஸ்வதி தம்பதியினரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற புஷ்பராணி ரதியின் அன்புக் கணவரும், ம.பாக்கியம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), நா.சிவசிதம்பரலிங்கம் (மணியம் வாத்தியார்) (ஓய்வு பெற்ற அதிபர் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம்), க.புஸ்பராணி (கனடா), நா.சுந்தரலிங்கம் (கனடா), நா.பஞ்சலிங்கம் (மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்களம்), நா.தனலட்சுமி (கனடா) ஆகியோரது அன்புச் சகோதரனும், கனகேஸ்வரி(யமுனா – ஜேர்மன்), கனகேஸ்வரன்(சங்கர் – கனடா), கோணேஸ்வரி (வேவி – கனடா), ரோகிணி (சைலா – குப்பிழான்) ஆகியோரது அன்புத் தந்தையும், நிர்மலன்(கனடா), றசனா (கனடா), சரவணன் (பிரதேச செயலகம், வவுனியா வடக்கு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆதுசன், ராகுல், யதீசா, விதுசா, சர்விகா, யக்சிதன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.08.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் குப்பிழான் முத்தர் வளவு பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளூக்காக குப்பிழான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முத்தர் வளவு**
**பிள்ளையார் கோவிலடி,**
**குப்பிழான் வடக்கு.**

**ரோகிணி (சைலா - மகள்)**
**0777394745**

**கனகேஸ்வரன் (சங்கர் - மகன்)**
**0116478856379**

**தகவல்**
**குடும்பத்தினர்**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.08.2021 இல் வெளியிடப்பெற்றது.